இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 05.02.2026

# ஒரு எஞ்சின் ஊழல் எஞ்சின்!

ஊழல் குறித்தும், வாரிசு அரசியல் குறித்தும் வாய்கிழியப் பேசுகிறார்கள் பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும். ஆனால் இந்த இரண்டும் மகாராஷ்டிரா மாநிலத்தில் கிழிந்து தொங்குகிறது.

**மிகப்பெரிய ஊழல்வாதியான அஜித் பவாரின் மனைவிக்கு துணை முதலமைச்சர் பதவியைக் கொடுத்து பா.ஜ.க. ஆட்சியில் உட்கார வைத்ததில் பா.ஜ.க.வின் அரசியல் கயமை வெளிப்பட்டு விட்டது.**

**அஜித் பவாருக்கு அறிமுகம் தேவையில்லை. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சரத் பவாரின் கட்சியை பலிகொடுத்தவர். தன் மீதான ஊழல் வழக்குகளை பா.ஜ.க.வை ஆதரிப்பதன் மூலமாக விடுவித்துக் கொண்டவர் அஜித் பவார். விமான விபத்தில் ஜனவரி 28 ஆம் தேதியன்று மிகச் சோகமான நிலையில் அவர் மரணம் அடைந்தார். மூன்று நாட்களுக்குள் அவரது மனைவி சுனேத்ரா பவாரை துணை முதலமைச்சர் ஆக்கி அழகு பார்த்துவிட்டது பா.ஜ.க.. அஜித் பவாரின் கட்சியைக் கபளீகரம் செய்வதற்காக பா.ஜ.க. எதையும் செய்யும் என்பதற்கு இது உதாரணம்.**

**பிரிந்து இருந்த சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சியுடன் தனது பிரிவை இணைக்க முடிவெடுத்து இருந்தார் அஜித் பவார். இணைப்புக்கான அறிவிப்பை பிப்ரவரி 12 ஆம் தேதியன்று வெளியிடப் போவதாகச் சொல்லி இருந்தார் அஜித் பவார். அதற்குள் அவரது மரணம் நடந்துவிட்டது.**

பா.ஜ.க. கூட்டணியில் அங்கம் வகித்து துணை முதலமைச்சராக இருந்தாலும், சமீப காலமாக பா.ஜ.க.வுக்கும் அஜித் பவாருக்கும் மோதல் ஏற்பட்டது. உள்ளாட்சித் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிராக சரத் பவாருடன் கூட்டணி வைத்து அஜித் பவார் போட்டியிட்டார். பா.ஜ.க. உள்ளாட்சிகளில் ஊழல் செய்வதாக அஜித் பவார் பேசி வந்தார். இதுவும் இப்போது அதிகமாகப் பேசப்படுகிறது.

அஜித் பவார் மரணம் அடைந்த உடன் அவர் மனைவி சுனேத்ரா பவார் அந்தக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். உடனடியாக அவருக்கு அஜித் பவார் வகித்த துணை முதலமைச்சர் பதவி தரப்படுகிறது. சுனேத்ரா பவார், அஜித் பவாரின் மனைவி மட்டுமல்ல; மகாராஷ்டிராவில் அமைச்சர் பதவியில் இருந்த பத்மசிங் பாட்டில் என்பவரின் சகோதரி. 2024 ஆம் ஆண்டு தான் நேரடி அரசியலில் நுழைந்தார். சரத் பவாரின் மகள் சுப்ரியா சுலேவை எதிர்த்து பாராமதி தொகுதியில் போட்டியிட்டு தோற்றார். பின்னர் மாநிலங்களவை உறுப்பினராக ஆக்கப்பட்டார். இப்போது கணவர் இறந்ததால் துணை முதல்வராகவும் ஆக்கப்பட்டுள்ளார். இதெல்லாம் பா.ஜ.க. கண்களுக்கு வாரிசு அரசியலாகத் தெரியவில்லையா? மோடி ஆசீர்வதிப்பது வாரிசு அரசியல் இல்லையா?

இவை அனைத்தையும் விட முக்கியமாக அஜித் பவாரின் ஊழல் முகம் இந்தியா அறிந்ததே!

**சிவசேனா (உத்தவ் அணி) எம்.பி.யான சஞ்சய் ராவத் எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள செய்தியில், "அஜித் பவாருக்கு புகழஞ்சலி செலுத்த செய்தி தாள்களில் முழு பக்க விளம்பரம் செய்துள்ளது பா.ஜ.க.. இந்த விளம்பரத்தால் ஒன்றும் ஆகப்போவது இல்லை. அஜித்பவார் மீதான ரூ.70,000 கோடி மதிப்பிலான ஊழல் குற்றச்சாட்டுகளை பிரதமர் மோடியும், மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிசும் திரும்பப் பெறுவதே, பா.ஜ.க. அவருக்கு செலுத்தும் உண்மையான புகழஞ்சலி" என்று கிண்டல் அடித்துள்ளார். இது கிண்டல் அல்ல; உண்மைதான்.**

கடந்த 2021, அக்டோபர் 7ஆம் தேதி, மகாராஷ்டிரா மாநிலத்தின் துணை முதல்வராக இருந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அஜித் பவார் வீட்டில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. அவரது மூன்று சகோதரிகளின் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. மும்பை, புனே, கோவா, ஜெய்ப்பூர் உள்ளிட்ட நகரங்களில் உள்ள அஜித் பவாருக்குச் சொந்தமான, நெருக்கமானவர்களின் வீடுகள், அலுவலகங்கள் என 70 இடங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. சோதனையின் முடிவில், 180 கோடி ரூபாய் அளவுக்கு வருமான வரிக் கணக்கில் காட்டப்படாத கருப்புப்பணம் கண்டறியப்பட்டதாகவும், 2.13 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள், 4.32 கோடி ரூபாய் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மேலும், அஜித் பவாருக்கு, அவர் பெயரிலும் அவரது பினாமிகள் பெயரிலுமாக மொத்தம் 1,000 கோடி ரூபாய் அளவுக்கு சொத்து மதிப்பு உள்ளதாக வருமான வரித்துறை செய்தியை கசிய விட்டது. 'என்னை மிரட்ட முடியாது' என்றார் அஜித் பவார். இப்போது அஜித் பவார் பயந்துவிட்டார். அவர் மீது ரெய்டு நடத்திய பா.ஜ.க. அஜித் பவாருக்கு துணை முதலமைச்சர் பதவியை வழங்கியது. பா.ஜ.க.வின் இரட்டை எஞ்சினில் ஒரு எஞ்சின் ஊழல் எஞ்சின் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

**இன்றைக்கு துணை முதலமைச்சர் ஆக்கப்பட்டுள்ளாரே சுனேத்ரா பவார், அவர் மீதான வழக்குகளை 2024 ஆம் ஆண்டு ஏப்ரலில் விசாரணை இல்லாமல் முடித்து வைத்ததும் பா.ஜ.க. அரசுதான். சுனேத்ரா பவார் மீது 25 ஆயிரம் கோடி மதிப்பிலான வழக்கு மும்பை பொருளாதாரக் குற்றப்பிரிவால் பதியப்பட்டது. அந்த வழக்கை முடித்துக் கொண்டோம் என்று நீதிமன்றத்தில் பா.ஜ.க. அரசு சொல்லி விட்டது.**

கடந்த 2005 முதல் 2010 வரை மகாராட்டிர மாநில கூட்டுறவு வங்கி, ரிசர்வ் வங்கியின் விதிகளை மீறி சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு கடன் வழங்கியதாகப் புகார் எழுந்தது. இதனால், வங்கிக்கு 25 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக புகார் கூறப்பட்டது. இது தொடர்பான மனுவை விசாரித்த மும்பை உயர் நீதிமன்றம் விசாரணை நடத்த உத்தரவிட்டது. அதன் பேரில், 2019ஆம் ஆண்டு அஜித்பவார், அவரது மனைவி சுனேத்ரா பவார் மற்றும் அவர்களது உறவினர் ரோகித் பவார் உள்ளிட்டோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதில் முறைகேடு ஏதுமில்லை என்று பா.ஜ.க. அரசே சொல்லி விட்டது. சுனேத்ரா பவார் ஆளும் கூட்டணி சார்பில் அஜித்பவார் பா.ஜ.க. கூட்டணியில் இணைந்து, அவரது மனைவி பாராமதி தொகுதியில் போட்டியிடும் சூழலில், இந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது.


**ஊழல்வாதிகளை சுத்தம் செய்யும் பா.ஜ.வின் 'வாஷிங் மெஷின்' வேலைகள் இவை. 'யாரும் எந்த பிராடும் செய்யலாம், பா.ஜ.க.வில் இருந்து செய்யுங்கள்' என்பதுதான் பா.ஜ.க. ஃபார்முலா!**

●●

## சிறையில் இருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

# 'மிசா' 50 ஆண்டு நினைவுகள் !

**மிசா நெருக்கடி நிலையை யாரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. 1976-ல் மிசா நெருக்கடி நிலையால் ஓராண்டுக்கு மேலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறையில் இருந்த நிகழ்வு இன்றைக்கு 50 ஆண்டுகளை கடந்து நிற்கிறது.**




### மிசா நெருக்கடி!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒரு விபத்தில் முதலமைச்சரானவர் அல்ல, 14 வயது முதல் கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.க. எனும் அமைப்பை உருவாக்கினார். அந்த அமைப்புதான் பின்னர் தி.மு.க. இளைஞரணி என உருவாகி விழுதுகளாகி, தி.மு.க.வை வளர்க்க உதவியது.

மிசா நெருக்கடி நிலையால் 1976-ம் ஆண்டு ஜனவரி 31ந்தேதி கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 500-க்கும் மேற்பட்ட தி.மு.க. நிர்வாகிகள் கைது செய்யப்பட்ட அந்த வரலாற்றை எவரும் மறந்துவிட முடியாது.

அந்த வரலாறுதான் ஒரு சாதாரண தொண்டன் மு.க.ஸ்டாலின் அவர்களை இன்றைக்கு தி.மு.க.வின் தலைவராகவும், இந்தியாவின் முதன்மை முதலமைச்சராகவும் உருவாக்கியுள்ளது.

1976 ஜனவரி 31-ல் ஆட்சியை கலைத்து விட்டு கவர்னர் ஆட்சி தமிழ்நாட்டில் பிறப்பிக்கப்பட்ட அன்று மாலையே காவல் துறை அதிகாரிகள் கோபாலபுரம் இல்லத்திற்கு படையெடுத்து வருகிறார்கள். அவர்களைக் கண்ட கலைஞர், "என்ன, என்னைக் கைது செய்ய வந்திருக்கிறீர்களா? கைது செய்து கொள்ளுங்கள். நான் தயார்" என்கிறார். அதைக் கேட்ட போலீஸ் அதிகாரிகள் சிறிது கலக்கத்துடன், "அய்யா, உங்களை கைது செய்வதற்காக அல்ல. உங்கள் மகன் ஸ்டாலினை கைது செய்ய எங்களுக்கு உத்தரவு வந்துள்ளது" என்று கூறினார்கள்.

அதனைத்தொடர்ந்து கலைஞர், அவர்களிடம் "ஸ்டாலின் தற்போது வீட்டில் இல்லை. வெளியூர் நிகழ்ச்சிக்குச் சென்றிருக்கிறார். நாளை வருவார். வந்ததும் உங்களுக்கு தகவல் தருகிறேன். வந்து கைது செய்து செல்லுங்கள்" என்று கூறுகிறார். வீட்டைச் சோதனையிட வேண்டும் என்கிறார்கள் போலீஸ் அதிகாரிகள். உடனடியாக சோதனை செய்து கொள்ளுங்கள் என்கிறார் கலைஞர்.

மறுநாள் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோபாலபுரம் வீடு வந்து சேர்ந்ததும், அவரிடம் "போலீஸ் உன்னை கைது செய்ய வரும், தயாராக இரு" என்று கூறிவிட்டு போலீசாருக்கு உடனடியாக தகவல் கொடுத்தார். கைது செய்ய வந்த போலீஸ் அதிகாரிகள் மு.க.ஸ்டாலின் அவர்களை கைது செய்து வாகனத்தில் ஏற்ற முயலும் போது, பொதுமக்கள் திரண்டு எதிர்க்கிறார்கள். அவர்களை விலகச் சொல்லி காவல் துறைக்கு ஒத்துழைப்பு கொடுங்கள் என்றார் கலைஞர்.

நேற்று வரை தமிழ்நாட்டின் மிகச் சிறந்த முதலமைச்சர், ஆட்சி கலைக்கப்பட்ட பின், தன் மைந்தனை தேடி வந்த காவல்துறையிடம் ஒப்படைத்தார். அந்த நாள் 2.2.1976.

### பொங்கி வந்த அழுகை!

அன்று சிறையில் என்ன நடந்தது? எம்.பி.யாக சென்னை மேயராக திகழ்ந்த சிட்டிபாபு சிறை கொடுமைகளை பற்றி சிறையில் ஸ்டாலின் அவர்களை போலீசார் தாக்கி உதைத்து சித்ரவதை செய்ததைப் பற்றி ஒரு நூலே எழுதியிருக்கிறார். அந்த நூலின் பெயர் "சிட்டிபாபுவின் சிறை டைரி."

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்களும் அந்த நேரத்தில் சிறையில் இருந்தவர் என்பதால், அங்கு மு.க.ஸ்டாலின் அவர்கள் போலீசாரால் தாக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி எழுதி வேதனைப்பட்டுள்ளார்.

அடிபட்ட மகனை கண்டு ஆறுதல் கூற சிறைக்கு வந்த கலைஞர் முன், சிறைக் கம்பிகளுக்கு உள்ளே அடிபட்ட காயம் வெளியே தெரியாதவாறு முழுக்கை சட்டை அணிந்து மறைத்து வந்தார் மு.க.ஸ்டாலின் அவர்கள். அவரிடம் போலீசார் அடித்தார்களா? என்று கேட்ட தந்தை கலைஞரிடம், பொங்கி வந்த அழுகையை மறைத்துக் கொண்டு, இல்லை, இல்லை என்று அப்போது கூறி சமாளித்தார் அவர்.

### பதவியல்ல; பொறுப்பு!

அந்த ஸ்டாலின்தான், இன்றைக்கு தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறார். முதலமைச்சர் பதவி என்பது சிலர் நினைப்பது போல், பகட்டான பொம்மை பதவி அல்ல. தியாகத்தால் அணி செய்யும் பதவி. தியாகச்சிந்தையோடு தமிழ் மக்களுக்குத் தொண்டுகள் செய்து தமிழையும், தமிழர்களையும் தமிழ் மக்களையும் வாழ வைக்கும் பதவி. அதைக்கூட பதவியல்ல. பொறுப்பு என்று கூறுகிறார் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிசா சிறையில் ஓராண்டு காலத்துக்கு மேல் அடைக்கப்பட்ட நாள் இன்றைக்கு 50 ஆண்டுகளைக் கடக்கிறது.

நன்றி: '**தினத்தந்தி**'
3.2.2026

## குமரிமுனையில் – திருவள்ளுவர் சிலைக்கு படகு சவாரிக்கு மூன்று புதிய பயணிகள் படகுகளின் கட்டுமானப்பணி!

# 'கோவா' கப்பல் கட்டும் தளத்தில் - அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

கோவா, பிப். 5-

கன்னியாகுமரியில் 31.12.2024 அன்று நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

"முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனையில் இருந்து அய்யன் திருவள்ளுவர் சிலையை பார்ப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் எளிதாக சென்றடையும் வகையில், படகுச் சவாரி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் மூன்று புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும்" என அறிவித்தார்.

இந்த மூன்று படகுகளுக்கும் பெருந்தலைவர் காமராசர், மார்சல் நேசமணி, ஜி.யு. போப் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்படும் என்றும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் நிதியில் மூன்று புதிய பயணிகள் படகுகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கோவாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் இதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (3.2.2026) கோவா கப்பல் கட்டும் தளத்திற்குச் சென்று அங்கு நடைபெற்று வரும் (SYNERGY SHIPYARD, GOA) படகு கட்டுமானப் பணிகளை களஆய்வு செய்தார்கள்.

முதலாவதாக, பெருந்தலைவர் காமராசர் பெயரிடப்பட்ட பயணியர் படகு கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. விரைவில் இதற்கான வெள்ளோட்டம் மற்றும் சோதனை ஓட்டம் (SEA TRIAL) நடைபெற இருக்கிறது. 2026 பிப்ரவரி மாத இறுதிக்குள் கன்னியாகுமரி துறைமுகத்தில், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திடம் பெருந்தலைவர் காமராசர் பெயரிட்ட முதல் பயணியர் படகினை ஒப்படைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட இருக்கிறது.

மீதமுள்ள "மார்சல் நேசமணி, ஜி.யு.போப்" ஆகிய இரண்டு படகு கட்டுமானப் பணிகளை விரைவில் நிறைவு செய்துதருமாறு கட்டுமான நிறுவன அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்கள்.

இந்த களஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன் மற்றும் நெடுஞ்சாலைதுறையின் சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.




பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி, மாவட்ட கழகத்தின் சார்பில், கரூர் பழைய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் மலர் தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. எம்.எல்.ஏ.க்கள் ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, வழக்கறிஞர் மணிராஜ், சுப.ராஜகோபால், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.